**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

# OS.NO. 14/2025 PW-1

| | |
|---|---|
| Name | மாணிக்கம் |
| Husband/Father Name | லேட் முனுசாமி |
| Village /Area | மருதம்பாக்கம் |
| Taluk | வாலாஜா |
| Occupation | – |
| Age | 78 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 15.10.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

எனது சாட்சியத்தை பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன். எனக்கு படிக்க தெரியும். நான் சொன்னதை தான் டைப் செய்யப்பட்டுள்ளது.

பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு

1. –Ex.A1. வாலாஜா வட்டாட்சியர் அவர்கள் எனது சகோதரர் முனுசாமிக்கு 10.01.1991 ஆம் தேதி கொடுத்த தாவா சொத்துக்களுக்கான உண்டான பட்டா எண் 146875 அசல்

2. –Ex.A2. எனது சகோதரர் முனுசாமியின் இறப்பு சான்றிதழ் அசல் தேதி 11.05.2020

3. –Ex.A. என்னுடைய ஆதார் அட்டை நகல்

4. –Ex.A4. தாசில்தார் கொடுத்த திரும்பப்பெற்ற கடிதம் ஆக குறியீடு செய்யப்படுகிறது.

## பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அண்ணன் இறந்துவிட்டார் அவருக்கு வாரிசு விளம்புகை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது அண்ணன் பெயர் என்ன என்றால் முனுசாமி ஆகும். அவர் எப்போது இறந்தார் என்றால் உடல்நிலை சரியில்லாமல் 2020 ம் வருடம் இறந்தார். அண்ணனுக்கு திருமணம் ஆகியிருந்ததா என்றால் இல்லை. எனது அப்பா பெயர் என்ன என்றால் சின்னப்பா ஆவார். எனது அம்மா பெயர் என்ன என்றால் கோவிந்தம்மாள் ஆகும். அவர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை நான் சிறு வயதிலிருக்கும் போதே இறந்துவிட்டார்கள். எனது அப்பாவுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பேர் நான், எனது அண்ணன் முனுசாமி, எனது அக்கா சரோஜா ஆவோம் எனது அக்கா தற்போது உயிருடன் இல்லை அவர் திருமணம் நடக்காமலேயே இறந்துவிட்டார். எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

எதற்காக வாரிசு சான்றிதழ் தேவைப்படுகிறது என்றால் என் பெயரிலும் எனது அண்ணன் பெயரிலும் மருதம்பாக்கத்தில் சொத்துக்கள் உள்ளது. அந்த சொத்தை என் பெயரில் மாற்றுவதற்காக தேவைப்படுகிறது. வ.சா.ஆ.1 பழைய பட்டா அசல் என்றால் சரிதான். தற்போதைய இணையவழி பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையாரின் வாரிசு சான்றிதழ் மற்றும் எனது அக்காவின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யாத நிலையில் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.10.16 10:19:44 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.